அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை கடிதம் : 01/2024

எனது இலக்கம் : Pns/P7/03-III தொகுதி
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2024.04.16

அமைச்சின் செயலாளர்கள்
மாகாணப் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**45 வயதுக்குப் பின்னர் நியமனம் உறுதி செய்யப்பட்ட ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்குதல்**
**அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகள் 25/2014, 25/2014 (I) மற்றும் 29/2019 தொடர்பானது**

மேற்படி விடயம் தொடர்பாக, இலக்கம் අමප/23/0464/605/024 மற்றும் 2023.02.28 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்துக்கு இலக்கம் අමප/23/0136/620/003-I மற்றும் 2024.03.11 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் பெறப்பட்டுள்ளது.

02. அதன்படி, பின்வரும் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

I. 2014.11.12 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 25/2014 மற்றும் 2014.12.29 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 25/2014 (I) இன் ஏற்பாடுகளின்படி வழங்கப்பட்டுள்ள நிரந்தர நியமனங்களுக்கு, அந்த உத்தியோகத்தர்கள் ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பில் ஓய்வூதியத்திற்காக பூர்த்தி செய்ய வேண்டிய ஏனைய தேவைகளை பூர்த்தி செய்வாராயின் தற்காலிக, அமய (தினசரி), பதிலீட்டு, ஒப்பந்த அல்லது சலுகை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யும்போது 45 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு ஓய்வூதிய உரித்தினை வழங்குதல்.

II. மேற்படி பரிந்துரையை 2014.11.12 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 25/2014 மற்றும் 2014.12.29 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 25/2014(I) ஆகியவற்றிற்கு மட்டும் ஏற்புடையதாக்கல்.

III. 2019.09.18 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 29/2019 இன் படி 45 ஆண்டுகளைக் கடந்து தற்காலிக, அமய (தினசரி), பதிலீட்டு, ஒப்பந்த அல்லது சலுகை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும்போது அந்த சுற்றறிக்கையின் பந்தி 2 இன் துணைப்பிரிவு (ii) ஐ ஏற்புடையதாக்கல்

03. மேற்படி விடயங்களைக் கருத்தில் கொண்டு குறித்த ஊழியர்களது ஓய்வு பெறச்செய்தல் நடவடிக்கைகளை நிலைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒப்பம்./ பிரதீப் யசரத்ன
செயலாளர்
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

தொலைபேசி : 011-2682460
தொலைநகல் : 011-2698460
மின்னஞ்சல் : sas-pen@pubad.gov.lk